# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2020 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா 20 புள்ளிகளுக்கான கட்டாய வினாவாகும். உயர் நிதிக் கணக்கீட்டுப் பாடத் திட்டத்தை முழுமையாக உள்ளடக்கும் வகையில் இவ்வினா தயாரிக்கப்பட்டிருந்தது. கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் திருப்திகரமாக விடையளிக்கத் தவறியிருந்தனர். விடைகளை மதிப்பீடு செய்கையில் அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் பின்வருமாறு:

**(1.1)** குறித்த சொத்தொன்று நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும்போது விற்பனை மூலமான இலாபத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள், தேய்மானம் பற்றிய அறிவைக் கொண்டிருக்காததால் சரியான விடையைப் பெறுவதற்கு அவர்களுக்கு இயலாமற் போயிருந்தது.

**(1.5)** இலாபப் பங்கீட்டு விகிதம் மாற்றமடையும்போது பங்குடமையொன்றின் ஆதாயம் பெறும் விகிதத்தை கணிப்பிடுவது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் மிக மோசமாக விடையளிக்கப்பட்ட வினா இதுவாகும். பரீட்சிக்கப்பட்ட பாடப்பரப்பு பற்றி எவ்வித தெளிவும் அவர்களிடம் காணப்படவில்லை என்பது அவர்கள் அளித்திருந்த விடைகளிலிருந்து அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

**(1.7)** இவ்வினா, நிதிக் கூற்றுக்களின் கூறுகள் (components) பற்றிப் பரீட்சித்திருந்தது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் போன்ற நிதிக் கூற்றுக்களின் மூலகங்களைக் (elements) குறிப்பிட்டிருந்தனர்.

**(1.8)** இவ்வினா அங்கத்துவச் சந்தாக் கணக்கு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசிக்காததால் ஆண்டின் காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானத்தை அவர்களால் சரியாகக் கணிக்க இயலவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

### வினா இல. 02

இவ்வினா, செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்ததுடன் அவர்களில் பலர் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், கோட்பாட்டு ரீதியான அறிவின்மை காரணமாக சில பரீட்சார்த்திகள் வங்கிக் கணக்கிணக்கத்தைச் சரியாகச் செய்திருக்காமை அவதானிக்கப்பட்டது. எவற்றைச் கூட்ட வேண்டும், எவற்றைக் கழிக்க வேண்டும் என்பது பற்றிய எவ்வித யோசனைகளையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. மேலும், சில

பரீட்சார்த்திகள், வங்கிக் கணக்கிணக்கத்தில் அவற்றைச் செம்மையாக்கம் செய்வதற்குப் பதிலாக காசேட்டில் தரப்பட்ட மீதிகளுடன் தேறாத வைப்புகள் மற்றும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தனர்.

மிகச் சில பரீட்சார்த்திகள், நேரடி வைப்புகளையும் நிலையியற் கட்டளைகளையும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது. இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது. அதிகளவான பரீட்சாரத்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கைச் சரியாகத் தயாரித்திருந்த போதிலும் அவர்களில் குறிப்பிடத்தக்களவிலானோர் திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கைச் சரியாகத் தயாரிக்கத் தவறியிருந்தனர்.

மேலும், சில பரீட்சார்த்திகள் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை குழப்பிப் பதிவுசெய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இங்கு பங்குடமையின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பகிர்வுக் கணக்கின் வரைபுகளைக் காட்டியிருந்தனர். இது அவர்களிடம் பங்குடமைக் கணக்குகள் தொடர்பான அறிவு காணப்படாததையே காட்டுகிறது. இதனால் அத்தகைய பரீட்சார்த்திகள் இலாபப் பகிர்வைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள், மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகளையும்கூட பகிர்வுக் கணக்கில் காட்டியிருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் மீதான வட்டிகளைச் கணித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இவ்வினா, சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு, EPF கொடுப்பனவுக் கணக்கு, ETF கொடுப்பனவுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு பரீட்சார்த்திகளைத் தேவைப்படுத்தியது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், பின்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டிருந்தன:

- அதிகளவான பரீட்சார்த்திகள் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவுப் பதிவுகளையும் செலவுப் பதிவுகளையும் மாற்றி மாற்றிப் பதிவு செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்படாத நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரித்திருந்தனர்.

- சில பரீட்சார்த்திகள் EPF, ETF பங்களிப்புகளைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.
- ETF, EPF கொடுப்பனவுகள் வரவு மீதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த சில சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.
- சில பரீட்சார்த்திகள் ஊழியர் சேம நிதியத்திற்கான தொழில்தருநரின் பங்களிப்பையும் (12%) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பையும் (3%) சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகளால் செய்முறைகள் காட்டப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 06

இங்கு 2019 டிசெம்பர் மாதத்திற்கான VAT கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. இவ்விடயம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு ஏறக்குறைய மோசமாகவே காணப்பட்டது. பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கக்கப்பட்டன:

- அதிகளவான பரீட்சார்த்திகள் VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு மற்றும் செலவுப்பதிவுகளை மாற்றி மாற்றிப் பதிவு செய்திருந்தனர்.
- VAT உள்ளடங்கலான உள்ளூர்க் கொள்வனவுகளின் பெறுமதி தரப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் ரூபா 5,949,985/- தொகை மீது 15% இல் VAT இனைக் கணிப்பிட்டிருந்தனர்.
- மிகச் சிறியளவிலான பரீட்சார்த்திகள் VAT கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிப்பதற்குப் பதிலாக கூற்றொன்றினைத் தயாரித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகளால் செய்முறைகள் காட்டப்படவில்லை.

எவ்வாறெனினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை.**

## பகுதி C

### வினா இல. 07

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான கணக்கீடு மீதான அறிவைப் பரீட்சித்தது. இங்கு தரப்பட்ட கழகத்தின் உணவுச்சாலை வியாபாரக் கணக்கையும் வருமான மற்றும் செலவினக் கணக்கையும் தயாரிக்குமாறு கோரப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க எத்தனித்திருந்த போதிலும் ஒரு சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது. பின்வரும் வழுக்களும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன:

- **பகுதி (a)** இல் உணவுச்சாலையின் வியாபாரக் கணக்கைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் உணவுச்சாலையின் கொள்வனவுகளைச் சரியாகக் கணிப்பிடாத காரணத்தால் அவர்களால் வியாபாரக் கணக்கைச் சரியானவாறு தயாரிப்பதற்கு இயலாமற் போயிருந்தது.
- பல பரீட்சார்த்திகளால் அங்கத்துவச் சந்தாவைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை.

- சில பரீட்சார்த்திகள், வருமான மற்றும் செலவினக் கணக்கில் எந்தெந்தப் பக்கத்தில் உரிய வருமானங் களையும் செலவுகளையும் பதிவு செய்ய வேண்டும் என்பது பற்றிய எவ்வித யோசனைகளையும் கொண்டிருக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள் உணவுச்சாலையுடன் தொடர்புடைய வாடகையின் அரைப்பங்கை ஏற்பிசைவு செய்யவில்லை. இதன் விளைவாக, சில பரீட்சார்த்திகள் வருமான, செலவினக் கணக்கில் முழுத் தொகையையும் காட்டியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் கொடுப்பனவுக் கணக்கு மற்றும் அங்கத்தவர் சந்தாக் கணக்குகளின் ஆரம்ப மீதியையும் இறுதி மீதியையும் அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 08

இவ்வினா பங்குடமைக் கணக்குகள் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. இங்கு பங்காளர்களின் மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. இதன்போது பங்குடமைக் கணக்குகள் தொடர்பான அடிப்படை அறிவு காணப்படாததை அவதானிக்க முடிந்தது. பின்வரும் பொதுவான தவறுகள் அவதானிக்கப்பட்டன:

- சில பரீட்சார்த்திகள், வினாவில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது நன்மதிப்பினை நடைமுறைக் கணக்கில் சீராக்கம் செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள், பங்காளர் நடைமுறைக் கணக்கில் மீள்மதிப்பீட்டு இலாபத்தைப் பதிவு செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் பங்காளர் மூலதனக் கணக்கில் மூலதனம் மீதான வட்டியைப் பதிவு செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் **நதுனியின்** இளைப்பாறலுடன் தொடர்புடைய சம்பந்தப்பட்ட சீராக்கங்களைச் செய்திருக்கவில்லை. விசேடமாக அவருடைய நடைமுறைக் கணக்கை மூடுதல், அதனை மூலதனக் கணக்கிற்கு மாற்றுதல், அதன் பின்னர் கடன் கணக்கொன்றிற்கு அவருக்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் மாற்றுதல் போன்றவற்றுக்கான செம்மையாக்கங்கள் செய்யப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 09

இவ்வினா, முறையான கணக்கேடுகளைப் பேணாத சந்தர்ப்பத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. இங்கு, தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி பரீட்சை மீதியைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் திருப்திகரமான செயலாற்றுகை யைக் காண்பிக்கவில்லை. ஒரு சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

- சில பரீட்சார்த்திகளிடம் பரீட்சை மீதி என்றால் என்ன என்பது பற்றிய புரிந்துணர்வு காணப்படாததுடன் அவர்கள் அதற்குப் பதிலாக வருமானக் கூற்றினைத் தயாரித்திருந்தனர்.
- அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட நிறுவனத்தின் மூலதனத் தொகையை கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

- இரட்டைப் பதிவு முறைமை பற்றிய அடிப்படை அறிவு, சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் போன்ற கணக்குகளின் வகைகளை அடையாளங்காணல் போன்றவற்றில் சில பரீட்சார்த்திகள் புரிதலற்றவர்களாகக் காணப்பட்டனர்.
- மேலும், சில பரீட்சார்த்திகள் தங்களது செய்முறைகளை முறையாகக் காட்டியிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை.**

## பகுதி D

### வினா இல. 10

இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றினது முகாமையின் பாவனைக்காக முற்றடக்க வருமானக் கூற்றையும் நிதி நிலைக் கூற்றையும் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முனைந்திருந்தனர்.

முழுப் புள்ளிகளையும் பெறத் தவறிய பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்ட வழுக்களும் பலவீனங்களும் பின்வருமாறு:

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் இறுதித் தொக்கு சீராக்கத்தைச் சரியானவாறு சீராக்கம் செய்திருக்க வில்லை. இருப்புப் பெறுமதி இழப்புக்கான கணக்கீட்டுச் செய்கைகள் மற்றும் இருப்புச் சீராக்கம் ஆகியன பற்றிய சில பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் மோசமாகக் காணப்பட்டது.

(2) ஐயக் கடன்களுக்கான 5% பொது ஏற்பாடானது ரூபா 230,000/- அறவிடமுடியாக் கடன் தொகையைக் கழித்த பின்னரான வியாபார வருமதிகள் மீதியில் செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் சிலர் அதனைத் தவிர்த்து மொத்த வியாபார வருமதிகளின் பெறுமதியில் ஐயக் கடன்களுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர். அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டின் கீழும் கணிப்பீடுகள் சரியாகச் செய்யப்படவில்லை.

(3) வருமான வரிச் சீராக்கத்தைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் தங்களது செய்முறைகளில் காட்டியிருக்கவில்லை என்பதுடன் அவர்களில் பலர் கவனத்திற்கொள்ளப்பட்ட ஆண்டிற்கான வருமான வரித் தொகையையும் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையினைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை.

(5) நிருவாகச் செலவினம் மற்றும் விநியோகச் செலவினங்களுக்கான விபரமான செய்முறைகள் சில பரீட்சார்த்திகளால் இணைக்கப்படாததால், அவர்கள் சில புள்ளிகளை இழந்திருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் சில எண் பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்ததுடன் சில எண் பெறுமானங்களை ஆயிரங்களில் எடுக்காமல் விட்டிருந்தனர். இதனால், அத்தகைய பரீட்சார்த்திகள் பதிவுசெய்த தொகைகளின் துல்லியமற்றதன்மை காரணமாக புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர்.

(7) வருமானக் கூற்று மற்றும் நிதிநிலைக் கூற்று ஆகியவற்றுக்காகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமைப்புகளைச் சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(8) சில பரீட்சார்த்திகளால் அட்டுறுக்களும் முற்கொடுப்பனவுகளும் நிதிக் கூற்றுக்களில் முறையாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(9) சில பரீட்சார்த்திகள் திரள் தேய்மானப் பெறுமானங்களை சரியான முறையில் குறிப்பிடாததன் காரணமாக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

(10) சில பரீட்சார்த்திகளால் சொத்துக்கள் மீதான தேய்மானம் செய்முறைத் தாளில் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவை நிதிக் கூற்றுக்களில் சரியான இடங்களில் பதிவு செய்யப்படவில்லை.

(11) சில பரீட்சார்த்திகளால் ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய தனிச்ச வட்டி சரியாகக் கணிப்பிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் தனிச்சங்களை நிலையான சொத்துக்களின் கீழ் காட்டியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதில் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

(1) கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளில் பயிற்சி பெறுவதானது செயலாற்றுகையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியாக அமையும். ஒரே அமைப்பைக் கொண்ட விடயங்கள் திரும்பவும் பரிசீலிக்கப்பட முடியும். எனவே இது சகல நேரங்களிலும் நன்மையானதாக அமையும்.

(2) நேர முகாமை மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கப்பட வேண்டிய நேரத்தை புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்த்து தீர்மானித்துக் கொள்ள முடியும்.

(3) வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் சகல கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் தெளிவாகக் காட்டவும்.

(4) வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

(5) தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன் வினா இலக்கங்களையும் சரியாக எழுதவும்.

(6) நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடையும் இயலளவு உச்ச நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

(7) இந்த மட்டத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களைப் படிக்கவும். இப்பாடத்திற்குரிய பாடப்புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றையும் அதேபோன்று பாடம் சம்பந்தமான வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

- * * * -